30.12.15

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மேட்டூர் அணையிலிருந்து விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி நீர் திறப்பு**

மேட்டூர் அணையிலிருந்து விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து 4,495 கனஅடியாகவும், அணையின் நீர்மட்டம் 93.53 அடியாகவும், நீர் இருப்பு 56.79 டி.எம்.சி.,யாகவும் உள்ளதாக பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளது. மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக வினாடிக்கு 600 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

தமிழக கடலோர மாவட்டங்களில் இன்று சில இடங்களில் மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் தகவல்

இலங்கை அருகே வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பதால் இன்று (புதன்கிழமை) தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:- ராமேசுவரம் , பாபநாசம் தலா 7 செ.மீ., பாம்பன் 5 செ.மீ., மணிமுத்தாறு 4 செ.மீ., ராமநாதபுரம், நாங்குநேரி தலா 3 செ.மீ., செங்கோட்டை, அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி தலா 2 செ.மீ., பாளையங்கோட்டை, முதுகுளத்தூர் தலா 1 செ.மீ. மழை பெய்துள்ளது.

**மின்சார பல்பு வடிவில் அதிசய முட்டை!**



மின் விளக்கு வடிவத்தில் கோழியொன்று முட்டையிட்டுள்ளது. ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டம், தேவரவலசை கிராமத்தைச் சேர்ந்தவர் சீனு. இவரது வீட்டில் வளர்த்துவரும் கோழி ஒன்று மின் விளக்கு (பல்பு) வடிவில் முட்டை இட்டுள்ளது. இதை அக்கிராம மக்கள் ஆச்சரியத்துடன் பார்வையிட்டனர். இது குறித்து கால்நடை மருத்துவர் சீனுவாச ராவிடம் கேட்டபோது, சில சமயத்தில் கோழியினுள் ஏற்படும் மரபணு மாற்றத்தினால் இது போன்ற வித்தியாசமான வடிவில் முட்டையிடும். இந்த முட்டையை கோழி அடைகாத்தால் அதிலிருந்து வெளிவரும் குஞ்சு எவ்வாறு பரிணாம மாற்றம் அடையும் என்பதைக் கண்டறிய அதை கால்நடை மருத்துவர் மருத்துவமனையில் வைத்து ஆய்வு செய்து வருகிறார்.

**மேலூரில் வேளாண் விஞ்ஞானிகளுடன் விவசாயிகள் இன்று கலந்துரையாடல்**

மதுரை வேளாண் அறிவியல் மையம் சார்பில் வேளாண் விஞ்ஞானிகள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வேளாண் விஞ்ஞானிகளும் விவசாயிகளும் நேரடியாக சந்தித்து தங்கள் நவீன வேளாண் யுக்திகள் குறித்து விளக்கங்கள் பெறலாம்.

இதேபோல அலங்காநல்லூர் அருகே உள்ள தாதகவுண்டன்பட்டியில் பழமரங்களின் அடர்நடவு முறை குறித்த செயல்விளக்கம் புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பான விவசாயிகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பயனடையுமாறு மதுரை வேளாண் கல்லூரி ஆராய்ச்சி மைய முதல்வர் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

**நாளை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை (டிசம்பர் 31) நடைபெறவுள்ளது. திருப்பூர்- பல்லடம் சாலையில் உள்ள எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கல்லூரி அருகே உள்ள புதிய மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தின் தரைத்தளத்தில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.இதில், திருப்பூர் ஆட்சியர் கு.கோவிந்தராஜ் பங்கேற்று விவசாயிகளிடம் இருந்து மனுக்களைப் பெறவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 77.36 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 77.36 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,368 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் விநாடிக்கு 400 கன அடி நீரும், வாய்க்காலில் விநாடிக்கு 1,900 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 14.3 டி.எம்.சி.

**நிரம்பி வழியும் சாத்தனூர் அணை: 2 மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

சாத்தனூர் அணை செவ்வாய்க்கிழமை காலை முதல் நிரம்பி வழிவதால், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டத்தில் காமராஜர் ஆட்சிக் காலத்தில் சாத்தனூர் அணை கட்டப்பட்டது. இந்த அணை மூலம் திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 119 அடி. முழு நீர் கொள்ளளவு 7,321 மில்லியன் கனஅடி. இந்த அணை செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் அணை முழுவதுமாக நிரம்பி வழிகிறது.

அணைக்கு விநாடிக்கு 255 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து விநாடிக்கு 115 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணை முழுவதுமாக நிரம்பியுள்ளதால், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த பல ஆயிரம் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நீண்ட நாள்களுக்குப் பிறகு அணை நிரம்பியுள்ளதால், பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படுமா என்று பொதுப்பணித் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் அண்மையில் பெய்த மழையால் கிணறு, ஏரி, குளங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. எனவே, இப்போதைக்கு அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டிய அவசியம் இருக்காது என்றனர்.

## 10 ஆண்டுகளுக்குப் பிறகு நிரம்பியது அரூர் பெரிய ஏரி

10 ஆண்டுகளுக்குப் பிறகு அரூர் பெரிய ஏரி செவ்வாய்க்கிழமை நிரம்பியது. அரூர் பெரிய ஏரி 1.66 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. இந்த ஏரி நிரம்பினால் அரூர் நகரில் சுமார் 2 ஆண்டுகளுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாது. இதனால் அரூர் நகர், எச்.தொட்டம்பட்டி, பச்சினாம்பட்டி, பழையப்பேட்டை, நாச்சினாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

இந்த ஏரிக்கு கொளகம்பட்டி கல்லாறு தடுப்பணையில் இருந்து தண்ணீர் வரும் கால்வாயில் ஏராளமான முள்புதர்கள் வளர்ந்து இருந்தன. அதிமுக ஒன்றியச் செயலர் ஆர்.ஆர்.முருகன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சி.தென்னரசு மற்றும் சமூக ஆர்வலர்கள், விவசாயிகளின் பெரும் முயற்சியால் முள்புதர்கள் அகற்றப்பட்டு கால்வாயில் தண்ணீர் வருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதையடுத்து கடந்த ஒரு மாதமாக இந்த ஏரிக்கு தண்ணீர் வந்துகொண்டிருந்தது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை (டிச.29) ஏரியின் வலது கோடியில் தண்ணீர் நிரம்பி வழிந்தது. இதற்கு முன்பாக கடந்த 2005-ஆம் ஆண்டு இந்த ஏரி நிரம்பியுள்ளது. அரூர் பெரிய ஏரியின்

நீர்ப்பிடிப்புப் பகுதியில் சுமார் 23.8 மில்லியன் கனஅடி தண்ணீர் தேங்கியிருப்பதாக பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

**ஜன.4-இல் களை மேலாண்மை குறித்த இலவச பயிற்சி**

பயிர்களில் ஒருங்கிணைந்த களை மேலாண்மை என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் ஜனவரி 4-ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் என்.அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இப் பயிற்சியில் பயிர்களில் காணப்படும் முக்கிய களைகள், அவை பரவும் விதம், ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாட்டு முறைகள், உழவியல் முறையில் ஊடுபயிர் சாகுபடி, பயிர் மூடாக்கு அமைத்தல், பயிர் சுழற்சி முறையில் களைக் கட்டுப்பாடு, இயந்திர முறையில் களைகளைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து செயல்விளக்கம் செய்து காட்டப்படும். இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது 04286-266345, 266650 என்ற தொலைபேசி எண்ணிகளில் தொடர்பு கொண்டு ஜனவரி 3-ஆம் தேதிக்குள் பெயரை கண்டிப்பாக முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விராலிமலை: ரூ.28.67 லட்சத்தில் விலையில்லா கால்நடைகள் அளிப்பு**

விராலிமலை ஒன்றியத்தில் கால்நடைத் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் சனிக்கிழமை வழங்கப்பட்டது.

விராலிமலை ஒன்றியத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சி. விஜயபாஸ்கர் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசியது:

அரசின் விலையில்லா கால்நடை வழங்கும் திட்டத்தின் கீழ் விராலூரில் 70 பயனாளிக்கு,வடுகப்பட்டியில் 68 பயனாளிக்கு என மொத்தம் 138 பயனாளிகளுக்கு ரூ 28.67 லட்சம் மதிப்பீட்டில் விலையில்லா வெள்ளாடு மற்றும் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளது என்றார் அமைச்சர்.

நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் ரவீந்திரன்(பொ)உதவி இயக்குநர் தேவதாஸ், வருவாய் கோட்டாட்சியர் பாலாஜி(பொ) ஒன்றியக்குழுத் தலைவர் மு.சுப்பையா,ஆத்மா குழுத்தலைவர் பழனியாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் வி. உதயகுமாரி, து. பாஸ்கர்,வடுகப்பட்டி ஊராட்சி தலைவர் சி. மணிவண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டிச. 31-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஆட்சியர் அலுவலக வளாகத்தில் டிச. 31-ஆம் தேதி காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ள விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வேளாண் அலுவலர்கள், தோட்டக்கலை உள்ளிட்ட அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

இதில் முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதி நிதிகள் பங்கேற்று, நிறைகுறைகளை தெரிவித்துப் பயன்பெறலாம்.

**கருப்புக்கட்டி, அச்சுவெல்லம் விலை உயர்வு**

தொடர் மழை மற்றும் பதநீர் சீசன் முடிவுக்கு வந்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் கருப்புக்கட்டி, அச்சுவெல்லம், மண்டவெல்லம் விலை உயர்ந்துள்ளது.

வடகிழக்குப் பருவமழையால் செங்கல் உற்பத்தி, மண்பாண்டத் தொழில், கருவாடு உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் முடங்கியுள்ளன. அந்த வரிசையில் வெல்லம் மற்றும் கருப்புக்கட்டி உற்பத்தியும் சேர்ந்துள்ளது. பதநீர் சீசன் முடிந்துவிட்டதால் தூத்துக்குடி மாவட்டத்தில் உடன்குடி, வேம்பார் பகுதிகளில் கருப்புக்கட்டி உற்பத்தி முற்றிலும் தடைபட்டுள்ளது. ஏற்கெனவே உற்பத்தி செய்து கிடங்குகளில் வைக்கப்பட்டிருந்த கருப்புக்கட்டிகள்தான் வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இதேபோல தொடர்மழையால் கரும்பு அறுவடைப் பணியும் தடைபட்டுள்ளது. இதனால் வெல்லம் உற்பத்தி குறைந்துள்ளது. பழனி, உடுமலைப்பேட்டை பகுதிகளில் இருந்து அச்சுவெல்லமும், சேலம், ஈரோடு மாவட்டங்களில் இருந்து வெல்லமும் திருநெல்வேலி மாவட்டத்துக்கு விற்பனைக்காக வருகின்றன. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு வந்ததில் இருந்து பாதியாக வரத்து குறைந்துள்ளது.

டிசம்பர் முதல் வாரத்தில் கிலோ ரூ.155-க்கு விற்பனையான உடன்குடி கருப்புக்கட்டி, இந்த வாரத்தில் ரூ.180-க்கு விற்பனையாகிறது. வேம்பார் ரகம் ஒரு கிலோ ரூ.140இல் இருந்து ரூ.165 ஆகவும், ஆலந்தூர் ரகம் ஒரு கிலோ ரூ.60 இல் இருந்து ரூ.80 ஆகவும் விலை உயர்ந்துள்ளன. அச்சுவெல்லம் ஒரு கிலோ ரூ.35இல் இருந்து ரூ.39 ஆக உயர்ந்துள்ளது. மண்டவெல்லம் ஒரு கிலோ ரூ.36இல் இருந்து ரூ.38.50 ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: கருப்புக்கட்டிகள் வரத்து இன்னும் 3 மாதங்களுக்கு இதே நிலையில்தான் நீடிக்கும். பங்குனி மாதத்தில்தான் கருப்புக்கட்டியின் வரத்து அதிகரித்து விலை சரிவை எதிர்பார்க்க முடியும். மார்கழி, தை மாதங்களில் அச்சுவெல்லம் மற்றும் மண்டவெல்லத்தின் விலை குறைய வாய்ப்பில்லை. ஆன்மிக மாதங்களாகவும், பொங்கல் பண்டிகைக் காலமாகவும் உள்ளதால் அச்சுவெல்லத்தின் விலை கிலோவுக்கு ரூ.45 வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றனர்.

**நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை நீடிப்பு பாபநாசம், மணிமுத்தாறு அணைகளிலிருந்து தொடர்ந்து உபரிநீர் திறப்பு**

நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை நீடித்து வருவதால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் இருந்து செவ்வாய்க்கிழமை 5000 கனஅடி உபரிநீர் திறக்கப்பட்டது.

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நீடிக்கும் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக மழை பெய்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் மழை நீடிக்கிறது. செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அணைப் பகுதிகளில் பதிவான மழை (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை 65, பாபநாசம் கீழ் அணை 44, மணிமுத்தாறு அணை 36.2, சேர்வலாறு அணை 31, கன்னடியன் அணைக்கட்டு 25.

பிற இடங்களில் பதிவான மழை: மூலக்கரைப்பட்டி 25.3, நான்குனேரி 25, அம்பாசமுத்திரம் 22, செங்கோட்டை 23, சேரன்மகாதேவி 17.4, திருநெல்வேலி 17, களக்காடு 15.2, பாளையங்கோட்டை 14, ஆலங்குளம் 12.4.

பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் 132.2 மி.மீ மழை பெய்ததையடுத்து, அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்தது. செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 2437 கனஅடி, சேர்வலாறு அணைக்கு 1000 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 1212 கனஅடி, கடனாநதி அணைக்கு 248 கனஅடி நீர்வரத்து இருந்தது. இந்த அணைகளில் இருந்து 5 ஆயிரம் கனஅடி உபரிநீர் ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது.

மணிமுத்தாறு அணையிலிருந்து பிரதான கால்வாய் பாசனத்துக்கு 200 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. வடக்குப் பச்சையாறு அணையில் இருந்து திறந்துவிடப்படும் உபரிநீர் தாமிரவருணியில் கலப்பதால், ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நீர்மட்டம்: பாபநாசம் அணை 141.85 அடி, சேர்வலாறு அணை 146.16 அடி, மணிமுத்தாறு அணை 117 அடி, கடனாநதி அணை 83.50 அடி, ராமநதி அணை 82.50 அடி, கருப்பாநதி அணை 70.24 அடி, குண்டாறு அணை 36.10 அடி, அடவிநயினார் அணை 132, வடக்குப் பச்சையாறு அணை 50 அடி, நம்பியாறு அணை 22.96 அடி, கொடுமுடியாறு அணை 52 அடி.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**நடவு இயந்திரம் மூலம் கூடுதல் மகசூல் - சிவகங்கை விவசாயி சாதனை**

இருக்கும் நீரை பயன்படுத்தி, குறைந்த செலவில் 150 நாள் பயிரான பொன்னி ரக நெல் நாற்றுகளை 'நடவு இயந்திரம்' மூலம் நடவு செய்து, ஏக்கருக்கு 20 சதவீதம் கூடுதல் நெல் மகசூல் கண்டு வருகிறார் சிவகங்கை,வாணியங்குடி விவசாயி கே.கண்ணா சுப்பிரமணியம்.

**அவர் கூறும்போது**: 30 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளதால், இயந்திரங்கள் மூலம் நாற்று போடுதல், நடவு செய்தல் மூலம் நெல் நடவு பணிகளை செய்தேன். இந்த முறை மூலம், வேலைப்பளு குறைவு, நோய் தாக்குதல் இருக்காது. தண்ணீர் தேவையும் குறையும்.

இயந்திரமின்றி வயலில் நெல் நாற்று நடவு செய்வதால் உழவு, நாற்று நடுதல், களைஎடுத்தல், நெல் அறுவடை வரை ஏக்கருக்கு ரூ.22 ஆயிரம் செலவாகும். கூலி ஆட்கள் பற்றாக்குறையால் நாற்று நடுதல், களைஎடுத்தல், அறுவடை செய்ய விவசாயி பெரும் சிரமத்தை சந்திக்க வேண்டி வரும். இப்பிரச்னையை மீறி நெல் அறுவடை செய்தால், ஏக்கருக்கு 45 (மூடை 65 கிலோ) மூடை தான் கிடைக்கும். ஆனால், எனது நிலத்தில் நெல் நாற்று பதியம் போடுவது முதல், வயலில் நெல் நாற்று நடவு செய்தல், அறுவடை செய்தல் போன்று அனைத்து பணிகளும் இயந்திர உதவியுடன் நடக்கிறது. இதனால், செலவு குறைவதோடு, திருந்திய நெல் சாகுபடி போன்று இயந்திரம் மூலம் நெல் நாற்றுகளை தள்ளி, தள்ளி நடுவதால், வேர் பிடிப்பு அதிகரித்து மகசூலும் அதிகரிக்கும். இதன் காரணமாக ஏக்கருக்கு வழக்கத்தை விட 20 முதல் 30 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும்.

**நெல் நாற்று விற்பனை**: நெல் நடவு செய்வதோடு மட்டுமின்றி பிற விவசாயிகளுக்கும் இயந்திர முறையில் நாற்று போட்டு, வயலில் நட்டு தரும் பணிகளையும் செய்கிறேன். ஏக்கருக்கு 15 கிலோ விதை நெல்லை என்னிடம் வழங்கினால், இயந்திரம் மூலம் பதியம் போட்டு, சொட்டு நீர் பாசனம் மூலம் நாற்று வளர செய்து, 15 நாட்களில் நெல் நாற்றுகளை பறித்து விவசாயிகள் வயலில் நடவு செய்யப்படும். நாற்று போடுவது முதல் வயலில் நடும் வரை அனைத்து செலவுடன் ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம்

கட்டணம். இங்கு கோ51, ஏ.டீ.டி.,45 ரக நெல் அதிகம் நடப்படுகிறது. குறைந்த நாளில் அறுவடை செய்யும் நெல்லில் மினரல் சத்து குறைவு. இதற்காக அதிக மினரல் சத்துள்ள 150 நாட்கள் வரை விளையும் பொன்னி ரக நெல்லை நடவு செய்துள்ளேன், என்றார். தொடர்பு கொள்ள 98424 92261.

**- என்.வெங்கடேசன், சிவகங்கை.**

## இந்திய முந்திரி பருப்பு ஏற்றுமதி வளர்ச்சி கவுன்சில் பணிகள்; சேவைகள்; மானியங்கள்

400 ஆண்டுகளுக்கு முன் போர்ச்சுக்கல் நாட்டில் இருந்து இந்திய கடற்கரைக்கு கொண்டு வரப்பட்டு பயிரிடப்பட்ட முந்திரி இன்று 7 லட்சம் எக்டேரில் பயிரிடப் படுகிறது. முந்திரி வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு, இங்கு விளையும் முந்திரியையும் பதப்படுத்தி முந்திரி பருப்பு, முந்திரி ஆயில் எடுக்கப்பட்டு 4 லட்சம் டன் முந்திரி பருப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் பல லட்சம் பேருக்கு இத்துறை வேலை வாய்ப்பை அளிக்கிறது. முதன் முதலாக முந்திரிப் பருப்பை ஏற்றுமதி செய்யத் தொடங்கிய நாடு இந்தியா. 1955ம் ஆண்டு இதன் ஏற்றுமதியை ஊக்குவிக்க “ இந்திய முந்திரிப் பருப்பு ஏற்றுமதி வளர்ச்சி கவுன்சில்” தொடங்கப்பட்டது.

**இதன் பணிகள்** : இந்திய ஏற்றுமதியாளர்களை வெளிநாட்டு இறக்குமதியாளர்களுடன் சந்திக்க வைப்பது. ஆர்டர்கள் பெற்றுத் தருவது. இந்திய முந்திரிப் பருப்பின் தரம் பற்றி வெளி நாடுகளில் பிரசாரம் செய்வது. வெளிநாடுகளில் நடக்கும் கண்காட்சிகளில் உறுப்பினர்களை கலந்து கொள்ளச் செய்தல். இந்தியாவில் பண்ருட்டி, கோவா, கொல்லம், ஐதராபாத், தாசர்கோடு, மங்களூர் என பல ஊர்களில் முந்திரிப் பருப்பு பதப்படுத்தும் பெரிய நிறுவனங்கள் உள்ளன. இந்த

நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு 40 கோடி ரூபாய் மானியம் இந்த கவுன்சில் வழங்கியுள்ளது. இந்த கவுன்சில் 1977ம் ஆண்டு கேரள மாநிலம் கொல்லத்தில் ஒரு சிறந்த “CEPC லேபரட்டரியை” தொடங்கியது. முந்திரியை சோதனை செய்து தரச்சான்று தர மட்டுமல்ல பலவகை உணவுப் பொருட்களை சோதிக்கவும் பயன்படுகிறது. தரத்தை பரிசோதிக்க பல பயிற்சிகளையும் இந்த நிறுவனம் வழங்குகிறது. பலவகை, உணவுப் பொருட் களைப் பற்றி பரிசோதிக்கவும், அதன் தரம் பற்றி படிக்கவும் இந்நிறுவனம் உதவுகிறது. தண்ணீர், மூலிகைகள், மீன், பால் பொருட்கள், தேன், பழம், இறைச்சி, பேக்கரி பொருட்களை பரிசோதிக்கவும், தரச்சான்று வழங்கவும் இந்த பரிசோதனைக் கூடம் உதவுகிறது.

இந்த கவுன்சில் பற்றி அறிந்து உதவி பெற Cashew Export Promotion Council of India, Cashew Bhavan, Mundakel, Kollam 691 001, Kerala. Ph: 0474 274 2704, www.cepc.org.in. www.cashewindia.org. கீழ்கண்ட வலைதளங்களையும் பார்த்து இத்துறை பற்றி நன்கு அறியலாம்.

www.fao.org, www.tnau.ac.in,

www.mofpi.gov.in,

www.cepclab.org.in,

www.kerelaagriculture.gov.in.

**-எம்.ஞானசேகர்,தொழில்ஆலோசகர், 93807 55629**

**புதிய பூச்சிக்கொல்லி மருந்துகள்**

தண்டு துளைப்பான் குளோரன்ட்ரனிலிப்ரோல் 0.4G 10கி/எக்டர் (அ) பிப்ரோனில் 550, 1000 1500 மில் / எக்டர் (அ) பிப்ரோனில் 80, 50-62.5 கி / எக்டர் (அ) ப்ளுபெண்டி அமைடு 20 WG 125 கி/ எக்டர் (அ) ப்ளுபெண்டி அமைடு 39.35 SC, 50கி/ எக்டர் (அ) தையா குளோபிரிட்

21.75 C 500 கி/ எக்டர் (அ) தையா மீத்தாக்சம் 25 WG 100 கி / எக்டர் (அ) ட்ரை அசோபாஸ் 40 EC 625 1250 மிலி / எக்டர் மருந்தினைத் தெளித்து தண்டு துளைப்பான் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். இலைமடங்குப்புழு: குளோரன்ட்ரனில்ப்ரோல் 18.5 SC 150மிலி/எக்டர், குளோரன்ட்ரனில்ப்ரோல் 0.45 10 கி/எக்டர் (அ) ப்ரோனில் 80 WG 5062.5கி/எக்டர் (அ) ப்ளுஸன்டிஅமைடு 20 WG 125250 கி/எக்டர் (அ) ப்ளுஸ்ன்டி அமைடு 39.35 SC 50கி/எக்டர் (அ) தையா மீத்தாக்சம் 25 NG 100 கி/எக்டர் (அ) ட்ரை அசோபாஸ் 40 EC 625 1250 மிலி/எக்டர் மருந்தினை தெளித்து இலை மடக்குப்புழுக்களை கட்டுப்படுத்தலாம். பயறு வகைப்பயிர்களைத் தாக்கும் காய் துளைப்பான் மற்றும் காயில் சாற்றை உறிஞ்சும் பஞ்சானை பூச்சிகளுக்கு இமாமெக்டின் பென்சோயேட் 5 SC 220 கிராம் (அ) இன்டாக்சா கார்ப் 15.8 SC 333 மி (அ) ஸ்பைனோசாட் 45 SC 125 162 மி.லி மருந்தினை ஒரு எக்டருக்கு தெளிக்கவும்.

**பூச்சி விரட்டி கரைசல் தயாரிக்கும் விதம்**

கசப்பு சுவையுள்ள (வேம்பு) 2 கிலோ, பாலுள்ள செடி (எருக்கு இலை) 2கிலோ, துவர்ப்பு சுவையுள்ள செடி 2 கிலோ, கொய்யா இலை 1/2 கிலோ, கரும்பு வெல்லம் அல்லது கருப்பட்டி 1/2 கிலோ, மேற்கண்ட இலைகளை உரலில் இட்டு ஆட்டி 10 லிட்டர் கோமியத்தில் கலக்க வேண்டும்.

1/2 கிலோ வெல்லம் அல்லது கருப்பட்டியை தூளாக்கி தண்ணீரில் கரைத்து மேற்கண்ட கரைசலுடன் சேர்த்து, கரைசலை பிளாஸ்டிக் அல்லது சிமென்ட் தொட்டியில் தயாரிக்க வேண்டும். நிழலான இடத்தில் வைக்க வேண்டும். மூடி வைக்க வேண்டும். இரண்டு நாள் கழித்து வடிகட்டி 1லிட்டர் கரைசலுடன் 10 லிட்டர் நீர் சேர்த்து தாவரங்களின் இலைகளில் தெளிக்க வேண்டும். அடர்த்தியான இலைப்பகுதிகளில்

இக்கரைசலை ஐந்து நாட்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும். 5 கிராம் காதி சோப்புக் கரைசலை சேர்த்துக் கொள்ள வேண்டும். 5 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும். இலைகளில் கரைசலின் நாற்றம் இருந்து கொண்டு இருக்கும். எனவே பூச்சிகள் நெருங்காது. ஒவ்வொரு தடவை தெளிக்கும் போது வேறு மூன்று, நான்கு ரக குலைகளை மேற்கண்டவாறு ஊறப்போட்டு 1 லிட்டருக்கு 10 லிட்டர் நீர் சேர்த்துக் சோப்புக் கரைசலையும் சேர்த்து தெளிக்க வேண்டும். இவ்விதம் தயார் செய்த பூச்சி விரட்டிக் கரைசலின் மூலம் பெரும்பாலான பூச்சிகளை விரட்டி விடலாம்.

**தீமை தரும் பூச்சிகளுக்கு பிடிக்காத இலை தழைகள்**

ஆடு, மாடு தின்னாத இலை தழைகள் தானே முளைத்து கண்ட கண்ட இடங்களிலெல்லாம் இருக்கின்றன.அவை நொச்சி, தும்பை, குப்பைமேனி, சீமை, அகத்தி, ஆடாதோடா, ஆடு தின்னாபாளை, சீத்தாப் பழம் இலை, வாத நாராயணன் சரக்கொன்றை அரளிச்செடி, சிறியாநங்கை, ஊமத்தை, கொளுஞ்சி, அவுரி, விராலி, உசிலை, இலை, வேம்பு இன்னும் எத்தனையோ இருக்கின்றன. இத்தகைய இலைகளையும் பசுமாட்டுக் கோமியத்தையும் சேர்த்து அல்லது கோமியம் இல்லாமல் பூச்சி விரட்டி தயாரிக்கலாம்.

**இலை சுருட்டுப்புழு, தண்டு துளைப்பான்**: புகையிலை, பச்சை மிளகாய், பூண்டு, இஞ்சி, வேப்பிலை முதலியவற்றில் ஒவ்வொன்றிலும் 500 கிராம் எடுத்து போதிய அளவு நீர் சேர்த்து உரலிலிட்டு ஆட்டிச் சாறு எடுத்து 10 லிட்டர் நீருடன் 200 மிலி சாறு சேர்த்துத் தெளித்தால் இலை சுருட்டுப்புழு, தண்டு துளைப்பான் ஆகியவை அகன்று விடும்.

**நுனி குருத்துப்புழு**: பூண்டு 500 கிராம், இஞ்சி 500 கிராம், மிளகாய் 500 கிராம், வேப்ப விதை 500 கிராம் சேர்த்து அரைத்து 25 லிட்டர் நீரில் கலந்து 5 கிராம் சோப்புக் கரைசலை தெளிக்க வேண்டும். நிலத்தின்

பரப்பு, பயிரின் வளர்ச்சி கண்டு தெளிக்கும் அளவை அனுபவத்தில் கூட்டியோ, குறைத்தோ தெளிக்கலாம்.**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

**தகவல் துகள்கள்: சூரிய ஒளியை அதிகம் உறிஞ்சும் மின் பலகை!**



சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கும் மின்பலகைகளை, எந்த திசையைப் பார்த்தபடி வைக்கிறோம் என்பது மிக முக்கியம். ஏனெனில் அதைப் பொறுத்தே, மின்பலகைகள் எவ்வளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்பது முடிவாகும்.ஆனால், சவூதியிலுள்ள மன்னர் அப்துல்லா அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் தைவான் தேசிய மத்திய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள, ஒரு புதிய பொருள் அந்த நிலையை மாற்றக்கூடும்.சிலிக்கா என்ற பொருளைக்கொண்டு, இந்த விஞ்ஞானிகள் உருவாக்கிஉள்ள ஒரு புதிய பொருளை, சூரிய மின்பலகை மீதுள்ள கண்ணாடியில் பூசிவிட்டால், அது, சூரிய ஒளி எந்த திசையில் இருந்தாலும், பெரும்பாலும் ஈர்த்துக்கொள்ளக்கூடியது என்று பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.நேனோ அளவில், தேன்கூடு போன்ற கட்டமைப்பைக் கொண்டிருக்கும் சிலிக்கா பூச்சு, கிடைக்கும் சூரிய ஒளியை, பலகை மீது திசை திருப்பி, 5.2 முதல் 27.7 சதவீதம் வரை அதிக

மின் உற்பத்திக்கு வழி வகுக்கிறது. இந்தியாவில் பல்லாயிரம் கோடிக்கு சூரிய ஒளி மின் தயாரிப்பு திட்டம் போடப்பட்டிருக்கிறது. இதுபோன்ற புதிய கண்டுபிடிப்புகளையும், மத்திய அரசு கணக்கில் எடுத்துக்கொண்டால், இந்தியாவின் மின் பற்றாக்குறை கணிசமாகக் குறையும்.

**கீழ்பவானி முறைநீர் பாசன சபை செயற்குழு கூட்டம்**

கவுந்தப்பாடி: கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபை பகிர்மான கமிட்டி சார்பில் உலக விவசாயிகள் தினம் மற்றும் செயற்குழு கூட்டம் கவுந்தப்பாடியில் நேற்று நடந்தது. யு10 பாசன சபை தலைவர் லோகநாதன் தலைமை வகித்தார். பழனிசாமி முன்னிலை வகித்தார். கீழ்பவானி பாசன திட்டத்தில் இரட்டைபடை பாசன பகுதிகளுக்கு, 2016 ஜன., 10 முதல் ஏப்., 30 வரை அணையில் உள்ள நீரின் இருப்பை கணக்கில் கொண்டு முறை வைத்து, ஆறு நனைப்புக்கு தண்ணீர் திறக்க வேண்டும்.

கீழ்பவானி பாசன பகுதிகளில் நெல் அறுவடை துவங்கவுள்ள நிலையில், பாசன பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்கள் துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வேளாண்மை விதைப் பண்ணையில்விதை சுத்திகரிப்பு நிலையம் துவக்கம்**

வானூர்: வானூர் அரசு வேளாண்மை விதைப் பண்ணையில், விதை சுத்திகரிப்பு நிலையம் துவக்க விழா நடந்தது.தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மூலம் வானூர் வேளாண் துறைக்கு புதியதாக விதை சுத்திகரிப்பு நிலைய கட்டடம் மற்றும் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. விதை சுத்திகரிப்பு நிலையத்தை முதல்வர் ஜெ., காணோலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

வானூர் அரசு விதைப் பண்ணையில் நடந்த துவக்க விழாவிற்கு, வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய சேர்மன் சிவா, நிலவள வங்கி தலைவர் பக்தவச்சலம், மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர்(மாநில திட்டம்) ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், ஜானகிராமன் எம்.எல்.ஏ., கலந்துகொண்டு, விதை சுத்திகரிப்பு இயந்திரத்தை துவக்கி வைத்தார். தாசில்தார் காமாசிங், மாவட்ட கவுன்சிலர் சக்கரபாணி, உதவி வேளாண் அலுவலர்கள் (பண்ணை மேலாளர்) சுரேஷ், ஆரோக்கியராஜ், ஆத்மா திட்ட தலைவர் ஏழுமலை, ஊராட்சி தலைவர்கள் கோவிந்தன், பாஸ்கர், விஜியலட்சுமி அறிவழகன், தவமணி, காஞ்சனா ராஜாஜி, வீரமுத்து மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்துக் கொண்டனர்.

**இலவச ஆடுகள்**

முதி: கமுதி அருகே செங்கப்படை ஊராட்சி பயனாளிகளுக்கு இலவச ஆடுகள் வழங்கும் விழா ஊராட்சி தலைவர் ராமுராமசாமி தலைமையில் நடந்தது. ஒன்றிய குழு தலைவர் பாலு, கால்நடை உதவி இயக்குநர் நடராஜ்குமார் முன்னிலை வகித்தனர். தலா 4 ஆடுகள் வீதம் 80 பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்பட்டது.

**மண்வளத்தை நிலை நிறுத்தும் உளுந்து : மானாவாரி ஆராய்ச்சி நிலையம்**

காரைக்குடி: "அறுவடை மேற்கொள்ளும் விவசாயிகள் அடுத்ததாக நிலத்தை தரிசாக போடாமல், மண்வளத்தை நிலை நிறுத்தும் விதமாக உளுந்து பயிரிடவேண்டும்,' என வேளாண் ஆராய்ச்சி நிலையம் தெரிவிக்கிறது.

ஒரு எக்டேர் சத்தான மண்ணில் ஒரு சதவீதம் கரிம சத்தும்,300 கிலோ தழைச்சத்தும் 20 கிலோ மணிச்சத்தும், 200 கிலோ சாம்பல் சத்தும் இருக்க வேண்டும்.

சிவகங்கை மாவட்டத்தை பொறுத்தவரை கரிமச்சத்து 0.4 சதவீதம் முதல் 0.7 சதவீதம் வரையே உள்ளன. நெல் நடவு செய்தவர்கள் மண் வளத்தை அதிகப்படுத்தும் உளுந்து பயிரை பயிரிட்டனர். உளுந்தானது வளிமண்டலத்தில் உள்ள நைட்ரஜனை உட்கிரகித்து மண்ணின் தழைச்சத்தை அதிகரிக்கவல்லது. உதிரும் இலைகள் கரிமசத்தை அதிகரிக்கும். அதன் வேரில் உள்ள முடிச்சுகளில் தழைச்சத்தை கிரகித்து கொடுக்கும் பாக்டீரியாக்கள் உள்ளன. இதனால், மண்வளம் மேம்பட்டு வந்தது. மழையின்மையால் அறுவடை முடிந்ததும் நிலத்தை தரிசாக போட்டு வந்தனர். இதனால் மண்வளம் குன்றி, போதிய விளைச்சல் பெற முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். இந்த ஆண்டு போதிய மழை பெய்துள்ளதால், பெரும்பாலான பகுதி கண்மாய்களில் நீர் இருப்பு உள்ளன. கடந்த ஆண்டில் விவசாயம் மேற்கொள்ளாதவர்களும் பருவம் தவறி விதைத்துள்ளனர். பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளில் அறுவடை தொடங்க உள்ளது. அறுவடை முடிந்ததும் நிலத்தின் வளம் மேம்பட உளுந்து பயிரிடலாம் என செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. ஆராய்ச்சி நிலைய துறை தலைவர் மெர்டில் கிரேஸ் கூறுகையில், ""மழை ஓரளவு பெய்துள்ளதால் நெல் அறுவடை முடித்த விவசாயிகள் வம்பன் 5,6 கோ-6 உள்ளிட்ட உளுந்து வகைகளை தை பட்டத்தில் விதைக்கலாம். 65 முதல் 75 நாளில் விளைச்சல் கிடைக்கும். ஏக்கருக்கு 5 கிலோ விதை மட்டும் தேவைப்படும். 5 கிலோ விதையில் 50 கிராம் சூடோமோனஸ், 10 கிராம் டிரைக்கோ டெர்மாவிரிடி கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். உளுந்துக்கான சந்தை மதிப்பு அதிகரித்துள்ளதால், விவசாயிகள் லாபம் பெறலாம்," என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மஞ்சள் காமாலையை குணமாக்கும் கீழாநெல்லி




உடலின் முக்கியமான உறுப்பாக கல்லீரல், மண்ணீரல் விளங்குகிறது. உடலை பாதிக்க கூடிய கிருமிகள் மழைக்கால வெள்ளத்தில் அதிகளவில் இருக்க வாய்ப்புள்ளது. மாசுபடிந்த நீர் எங்கும் கலந்து விடுவதால் ஹெபடிடிஸ் பி, சி, டி கிருமிகள் உருவாகிறது. இதனால் மஞ்சள் காமாலை ஏற்படுகிறது. காமாலை வந்தால் பசியின்மை உண்டாகும். உடலில் வெப்பம் மிகுதியாக இருக்கும். சிறுநீர் மஞ்சளாக இருக்கும். கண்கள், தோல், நகம் ஆகியவை மஞ்சளாக மாறிவிடும்.

பித்தம் அதிகரித்து ஈரல் செயல்பாடுகளில் ஏற்படும் குறைபாடுகளால் மஞ்சள் காமாலை வருகிறது. சுகாதாரமற்ற உணவு, சுத்தமில்லாத தண்ணீர் போன்றவை மஞ்சள் காமாலைக்கு காரணமாகிறது. கீழா நெல்லியை பயன்படுத்தி கல்லீரலை பலப்படுத்தும் மற்றும் மஞ்சள் காமாலையை குணப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம்: வேருடன் கீழாநெல்லியை அரைத்து அதன் சாறு 2 ஸ்பூன் எடுத்துக் கொள்ளவும்.

இதனுடன் 2 ஸ்பூன் பாகற்காய் சாறு, உப்பு சேர்க்காத அரை டம்ளர் மோர் சேர்த்து கலக்கவும். இதை காலை, மாலை என 18 நாட்கள் எடுத்துக் கொண்டால் ஈரல் பாதிப்பு, மஞ்சள் காமாலை சரியாகும். மழைக்காலத்தில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதாலும், வெயில் காலத்தில் மாசுக்கள் குடிநீரில் கலந்து விடுவதாலும் மஞ்சள் காமாலை ஏற்படுகிறது. கசப்பு சுவையை கொண்ட கீழாநெல்லி பித்தத்தை சமப்படுத்தும் தன்மை கொண்டது. மஞ்சள் காமாலையை குணப்படுத்தும் மருந்தாகிறது.

கீழாநெல்லியின் வேர், தண்டு, இலை, காய் ஆகியவற்றை எடுத்து சிறு துண்டுகளாக்கி கொள்ளவும். இதனுடன் அரை ஸ்பூன் சீரகம், சிறிது பனங்கற்கண்டு, நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி காய்ச்சிய பசும்பால் சேர்த்து குடிக்கவும். இதனால், மஞ்சள் காமாலை மறைந்து போகும். ஈரல் பலப்படும். மஞ்சள் காமலைக்கு கீழாநெல்லி, பொன்னாங்கன்னி கீரை, மஞ்சள் கரிசாலை, மணத்தக்காளி கீரை, கறிவேப்பிலை ஆகியவை மருந்தாகிறது. இதில் தலை சிறந்ததாக கீழாநெல்லி விளங்குகிறது. மூக்கிரட்டை கீரையை பயன்படுத்தி மஞ்சள் காமாலைக்கு மருந்து தயாரிக்கலாம். ஒருபிடி அளவு மூக்கிரட்டை கீரை, அரை ஸ்பூன் சீரகம், அரை ஸ்பூன் பனங்கற்கண்டுடன் ஒரு டம்ளர் அளவு நீர் விட்டு கொதிக்க வைத்து வடிக்கட்டி எடுக்கவும். மஞ்சள் காமாலை இருப்பவர்கள் 100 மி.லி காலை, மாலை என உணவுக்கு முன் எடுத்துக் கொள்ளவும். மற்றவர்கள் வாரம் ஒருமுறை குடித்தால் மஞ்சள் காமாலை வராமல் தடுக்கலாம். மருதாணியை பயன்படுத்தி மஞ்சள் காமாலை, கல்லீரல் வீக்கத்துக்கான மருந்து தயாரிக்கலாம். மருதாணி இலைகளில் இருந்து சாறு எடுக்கவும். 2 ஸ்பூன் மருதாணி சாறுடன், அரை ஸ்பூன் தேன் சேர்த்து கலக்கவும். இதை காலை, மாலை உணவுக்கு முன்பு குடித்துவர மஞ்சள் காமாலை குணமாகும்.

**கடந்த 4 ஆண்டுக்கு பிறகு சாத்தனூர் அணையின் நீர்மட்டம் 119 அடி முழுமையாக நிரம்பியது 255 கனஅடி நீர் வெளியேற்றம்**

திருவண்ணாமலை, : தானே புயலால் கடந்த 2011ம் ஆண்டு முழுமையாக நிரம்பிய சாத்தனூர் அணை, கடந்த நான்கு ஆண்டுகளுக்கு பிறகு நேற்று முழு கொள்ளளவான 119 அடி நிரம்பியது. சாத்தனூர் அணை பாசனத்தை நம்பி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 50 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் உள்ளன. இந்நிலையில், நான்கு ஆண்டுகளாக நீடித்த வறட்சியால், சாத்தனூர் அணை முழுமையாக நிரம்பவில்லை. அதனால், அதை சார்ந்த சாகுபடி பரப்பு தரிசாக இருந்தது. இந்நிலையில், கடந்த மாதம் தொடங்கி, தொடர்ந்து பெய்த வடகிழக்கு பருவமழையால், சாத்தனூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. மழை ஒய்ந்த பிறகும் தென்பெண்ணை வழியாக தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால், சாத்தனூர் அணையின் பாதுகாப்பு கருதி, அதன் மொத்த உயரமான 119 அடியில், 118.50 அடி மட்டுமே தண்ணீர் நிரப்பப்பட்டது. மீதமுள்ள அரை அடி உயரத்துக்கு தண்ணீரை நிரப்பவில்லை. கடந்த 25 நாட்களாக அணையில் இருந்த உபரி நீர் வெளியேற்றப்பட்டது. இந்நிலையில், தென்பெண்ணை வழியாக அணைக்கு வரும் தண்ணீரின் அளவு கடந்த சில நாட்களாக படிப்படியாக குறைந்தது. எனவே, அணையின் நீர்மட்டத்தை முழுமையாக நிரப்ப அதிகாரிகள் முடிவு செய்தனர். அதன்படி, கடந்த இரண்டு நாட்களாக அணையில் இருந்து உபரிநீர் வெளியேற்றவில்லை. தொடர்ந்து, நேற்று மாலை 6 மணியளவில், அணையின் மொத்த நீர்மட்ட உயரமான 119 அடி முழுமையாக நிரம்பியது.

அணையின் கொள்ளளவு 7,321 மில்லியன் கன அடியாக உயர்ந்திருக்கிறது. அதனால், அணையில் இருந்த வினாடிக்கு 255 கன

அடி உபரிநீர் நேற்று இரவு முதல் வெளியேற்றப்படுகிறது. கடந்த 2011ம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதி உருவான தானே புயல் மழையால், சாத்தனூர் அணையின் நீர்மட்டம் 119 அடி நிரம்பியது. அதன்பிறகு, மிகச்சரியாக நான்கு ஆண்டுகளுக்கு பிறகு சாத்தனூர் அணை மீண்டும் முழு கொள்ளளவு நிரம்பியிருக்கிறது.

**பனிப்பொழிவால் மல்லி, முல்லை வரத்து குறைந்தது கிலோ ரூ.500க்கு உயர்வு**

கோவை, : கோவை மொத்த பூ மார்க்கெட்டிற்கு மல்லி, முல்லை வரத்து தலா 3 டன்னில் இருந்து தலா 500 கிலோவாக குறைந்ததால் விலை கிலோ ரூ.250ல் இருந்து ரூ.500க்கு உயர்ந்துள்ளது. கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் மொத்த பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு ரக பூக்கள் வருகிறது. இதில் மல்லி, முல்லை ஆகிய பூக்கள் அதிகளவில் சத்தியமங்கலத்தில் இருந்து வருகிறது. கடந்த ஒரு வாரமாக பனிப்பொழிவு காரணமாக சத்தியமங்கலத்தில் உள்ள மல்லி, முல்லை செடிகளில் பச்சை பூ நோய் தாக்குதல் ஏற்பட்டு, பூக்கள் மகசூல் குறைந்துள்ளது. இதே போல் கோவை சுற்று வட்டார பகுதிகளிலும் பனிப்பொழிவு காரணமாக பூக்கள் மகசூல் குறைந்துள்ளது. இதனால் கோவை மார்க்கெட்டிற்கு மல்லி, முல்லை ஆகியவை தினசரி தலா 3 டன் வருவது குறைந்து, தற்போது தலா 500 கிலோ மட்டுமே வருகிறது. இதனால் பூக்களுக்கு கிராக்கி ஏற்பட்டு, விலை உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் இதன் விலை கிலோ ரூ.600 ஆக உயர்ந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை இதன் விலை கிலோ ரூ.250 ஆக இருந்தது. நேற்று விற்பனை சரிந்ததால் விலை ரூ.500 ஆக இருந்தது. கேரளாவில் திருமண முகூர்த்தம் மற்றும் தமிழகத்தில் ஐயப்ப பக்தர்கள் பூஜைக்காக மல்லி, முல்லை உள்ளிட்ட பல்வேறு பூக்கள் கொள்முதல் நிலவுவதால் பூக்கள் விலை உயர்ந்துள்ளது என்கின்றனர் வியாபாரிகள்

**மாதிரி நாற்றங்கால் பண்ணை இடம் அதிகாரி ஆய்வு**

. க.பரமத்தி, : கார்வழி அருகே தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் அமைக்கப்பட உள்ள மாதிரி நாற்றங்கால் பண்ணை இடத்தை மாவட்ட திட்ட இயக்குநர் கோமகன் ஆய்வு செய்தார். க.பரமத்தி ஒன்றியம், கார்வழி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நிலத்தில் மாதிரி நாற்றங்கால் அமைக்க அரசு திட்டமிடப்பட்டுள்ளது. அந்த இடத்தை மாவட்ட திட்ட இயக்குநர் கோமகன் ஆய்வு செய்தார். அப்போது துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

**சரியான முறையில் உரமிட்டால் ஒரு தென்னை மரத்தில் ஆண்டுக்கு 200 காய்கள் மகசூல் பெறலாம் வேளாண் அதிகாரி வழிகாட்டல்**

பட்டுக்கோட்டை,: சரியான முறையில் தென்னைக்கு உரமிட்டால் ஆண்டுக்கு 200 காய்கள் வரை மகசூல் பெறலாம் என்று வேளாண் அதிகாரி தெரிவித்தார். இது குறித்து பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: நெட்டை ரக தென்னைக்கான உர பரிந்துரைகள்:-நடவு செய்தது முதல் ஒரு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 10 கிலோ, யூரியா 0.325 கிலோ, சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 0.5 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 1.5 கிலோ, 2 வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 20 கிலோ, யூரியா 0.650 கிலோ, சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 1 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 2.5 கிலோ, 3 வருட கன்றுக்கு தொழு உரம் 30 கிலோ, யூரியா 0.975 கிலோ, சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 1.5 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 3.750 கிலோவும், 4 வருட கன்றுக்கு தொழு உரம் 40 கிலோ, யூரியா 1.3 கிலோ, சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 2 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 5 கிலோவும்,5 வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மரங்களுக்கு தொழுஉரம் 50 கிலோவும், யூரியா 1.3 கிலோ சூப்பர் மற்றும் பொட்டாஷ்

தலா 2 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 5 கிலோவும் இட வேண்டும். செம்பான் சிலந்தி தாக்குதல் காணப்படும்5 வருடத்திற்கு மேற்பட்ட மரங்களுக்கு 2 கிலோ என்பதற்கு பதிலாக 3.5 கிலோ வரை பொட்டாஷ் சேர்த்து இடலாம். நெட்டை- குட்டை மற்றும் குட்டை -நெட்டை வீரிய ஒட்டு ரக தென்னைக்கான உர பரிந்துரைகள் : நடவு செய்தது முதல் ஒரு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 15 கிலோ, யூரியா 0.5 கிலோ, சூப்பர் 0.375 கிலோ, பொட்டாஷ் 0.750 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 1.5 கிலோவும், 2வருட கன்றுக்கு தொழு உரம் 30 கிலோ, யூரியா 1 கிலோ, சூப்பர் 0.750 கிலோ, பொட்டாஷ் 1.5 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 2.5 கிலோவும்,3 வருட கன்றுக்கு தொழு உரம் 45 கிலோ, யூரியா 1.5 கிலோ, சூப்பர் 1.150 கிலோ, பொட்டாஷ் 2.250 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 3.750 கிலோவும், 4வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மரம் ஒன்றுக்கு தொழுஉரம் 60 கிலோ, யூரியா 2.250 கிலோ, சூப்பர் 1.5 கிலோ, பொட்டாஷ் 3 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 5 கிலோ இட வேண்டும். மேற்கண்ட உர பரிந்துரை அளவினை இரு சம பங்காக பிரித்து வருடத்தில் இருமுறை இட வேண்டும். அதாவது மார்கழி, தை (டிசம்பர்- ஜனவரி) மாதங்களில் ஒருமுறையும், ஆனி, ஆடி (ஜுன் - ஜுலை) மாதங்களில் ஒரு முறையும் இட வேண்டும். பேரூட்டச்சத்துக்களை கொடுக்கக் கூடிய மேற்கண்ட உரங்களை இட்ட 30 முதல் 45 நாட்கள் கழித்து நுண்ணூட்டச் சத்துக்களைக் கொடுக்கக் கூடிய தென்னை நுண்சத்து உரத்தினை மரம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் வருடத்தில் இரண்டு முறை சரிபாதியாக பிரித்து இட வேண்டும் (அல்லது) மரம் ஒன்றுக்கு போராக்ஸ் 50 கிராம், ஜிப்ஸம் 1 கிலோ மற்றும் மெக்னீசியம் சல்பேட் 0.5 கிலோ ஆகியவற்றை கலந்து மரத்தை சுற்றி வருடத்திற்கு ஒருமுறை இட வேண்டும். இடக்கூடிய பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட உரங்களை மரத்தைச் சுற்றி 5 அடி தூரத்தில் இட்டு மண்ணை கிளறிவிட்டு உடனடியாக தண்ணீர்

பாய்ச்ச வேண்டும். இவ்வாறு முறையாக உரமிடும் பட்சத்தில் குரும்பை உதிர்தல், ஒல்லிக்காய், காய்களில் வெடிப்பு, நீள வடிவிலான வெற்றுக்காய்கள் ஆகிய பிரச்சனைகள் குறைந்து ஆண்டு ஒன்றுக்கு மரம் ஒன்றுக்கு சராசரியாக 150 முதல் 200 தேங்காய்கள் வரை நிச்சயம் மகசூல் எடுக்க முடியும். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## நெற் பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை செய்வது எப்படி? விவசாயிகளுக்கு பயிற்சி

திருமயம், : நெற் பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை செய்வது எப்படி? என்பது குறித்து அரிமளம் வட்டார விவசாயிகளுக்கு வேளாண் துறையினர் பயிற்சி அளித்தனர். புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் வட்டாரம் நெடுங்குடி கிராமத்தில் வேளாண் துறை சார்பில் பண்ணைப் பள்ளி நடத்தப்பட்டுவருகிறது. இப்பண்ணைப் பள்ளியில் 4ம் வகுப்பு பாடமாக வளர்ச்சிப் பருவத்தில் நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துவது, மேலும், நோய்த் தாக்குதலால் ஏற்படும் பொருளாதாரச் சேதம், நுண்ணூட்ட குறைவால் நெற் பயிரில் ஏற்படும் அறிகுறிகள் மற்றும் நுண்ணூட்டம் இடுவதன் அவசியம் என நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் வளர்ச்சிப் பருவத்தில் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள் குறித்து அரிமளம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் உதயகுமார் விளக்கமாக எடுத்துரைத்தார். வளர்ச்சிப் பருவத்தில் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உழவியல் முறை, நேரடி அழிப்பு முறை, உயிரியல் முறை ஆகியன குறித்தும், நன்மை, தீமை செய்யும் பூச்சிகள் குறித்தும் அப்போது அவர் தெளிவாக எடுத்துக் கூறினார். அத்துடன் விளக்குப் பொறி, இனக் கவர்ச்சிப் பொறி அமைத்தல் குறித்து செயல் விளக்கம் அளித்தார். இதே போல், வயல்களில் நன்மை செய்யும் பூச்சிகளான பொறி வண்டு, ஊசி தட்டான், சிலந்தி ஆகியவற்றை காண்பித்து விளக்கினார். அப்போது அவர், சிலந்திகள் வயல்களில் பெருக்கமடைய சிறிய குச்சிகளைக் கொண்டு பந்தல் அமைக்க வேண்டும்

என்றும், பொறி வண்டுகள் பெருகிட வரப்பில் தட்டைப்பயறை பயிரிட வேண்டும் என்றும் விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் முகமது ஷாஜஹான், நெற்பயிருக்கு நுண்ணூட்டம் இடுவதன் அவசியம், நுண்ணூட்டப் பற்றாக்குறையால் நெற்பயிரில் தென்படும் அறிகுறிகள் குறித்துப் பேசினார். இதில் நெல் நுண்ணூட்டம் குறித்து செயல் விளக்கம் அளித்தார். குறிப்பாக, ஏக்கருக்கு 5 கிலோ நுண்ணூட்டம் 20- 30 கிலோ மணலுடன் கலந்து நடவுவயலில் இடும் முறை பற்றி செயல் விளக்கம் அளித்தார். வேளாண் உதவி அலுவலர், வட்டாரத் தொழில்நுட்ப உதவி மேலாளர் விக்னேஷ் ஆகியோர் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலால் உண்டாகும் மகசூல் சேதத்தை விளக்கிக் கூறினார். அத்துடன் இதை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை எடுத்துரைத்தனர்.

கோவையில் இயற்கை முறை வேளாண் பயிற்சி பட்டறை தஞ்சையிலிருந்து 50 பேர் உள்பட1,500 விவசாயிகள் பங்கேற்பு

கும்பகோணம், : இயற்கையான முறையில் செலவில்லாமல் விவசாயம் செய்வது பற்றி கோவை மாவட்டம் பல்லடத்தில் நடைபெற்ற 8 நாள் பயிற்சிப் பட்டறையில் தஞ்சை மாவட்டத்தில் 50 பேர் உள்பட தமிழகத்திலிருந்து 1,500 இயற்கை விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிர்களுக்கு யூரியா, பொட்டாஷ், டிஏபி உள்ளிட்ட ரசாயன உரங்களை வைப்பதால் மண் மலடாகி விடுவதுடன் மக்களுக்கு சர்க்கரை நோய், இருதய அடைப்புகள், மூட்டுவலி, சரும நோய், புற்றுநோய் பாதிப்புகள் ஏற்பட்டு அவதியுற்று உணவே விஷமாகும் சூழ்நிலை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில் விவசாயிகளிடையே தற்போது விழிப்புணர்வு காரணமாக ரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை விவசாயத்திற்கு பெரும்பாலான விவசாயிகள் மாறி வருகின்றனர். இந்நிலையில் மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த வேளாண் வித்தகர் சுபாஷ் பாலேக்கர் தமிழ்நாட்டை சேர்ந்த 1,500 இயற்கை விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி மற்றும் ஒரு பைசா

செலவில்லாத இயற்கை உரம் தயாரிப்பு குறித்து 8 நாள் பயிற்சி அளித்துள்ளார். இதில் கும்பகோணம் அடுத்த ஏராகரம் கிராமத்திலிருந்து இயற்கை விவசாயிகள் சுவாமிநாதன், சவுந்தரராஜன், செல்வராஜ், உதயகுமார், தங்கையன் உள்பட தஞ்சை மாவட்டத்திலிருந்து 50க்கும் மேற்பட்ட இயற்கை விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சி பெற்ற சுவாமிநாதன் கூறுகையில், நான் பல ஆண்டுகளாக 15 ஏக்கர் பரப்பில் நெல் மற்றும் கரும்பு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ரசாயன உரங்களை இட்டு பயிர் செய்தேன். ரசாயன உரங்களின் விலை அதிகம். பூச்சி தாக்குதல், மக்களை தாக்கும் மர்ம நோய்கள், சாகுபடி செய்யும் மண்ணே மலடாகி விடுகிறது. இதனால் ஏராளமான மக்கள் நோயினால் அவதிக்குள்ளாகி வருவது அறிந்து மனம் வெதும்பி பிறகு கடந்த 5 வருடமாக ரசாயன உரங்களை முழுவதுமாக விட்டு விட்டு இயற்கை முறையில் விவசாயம் செய்து வருகிறேன். முன்பெல்லாமல் நெல்லுக்கு இயற்கை உரமான பஞ்சகவ்யம், அமிர்த கரைசல் பயிர்களுக்கு தெளித்தேன். இதனால் நெல் பயிர்கள் நன்றாக செழிப்புடன் அதிக மகசூல் கிடைத்தது. இயற்கை முறையில் விவசாயம் செய்வதால் நாட்டுக்கு விஷமற்ற உணவு பொருளை வழங்க முடிகிறது. மேலும் இதற்கு அடுத்த கட்டமாக தற்போது கடந்த வாரத்தில் பல்லடத்தில் நடைபெற்ற சுபாஷ்பலேக்கரின் செலவில்லா இயற்கை விவசாய பயிற்சி முகாமில் எங்களுக்கு நுண்ணுயிர் உற்பத்தியாகும் செலவில்லா உரக்கரைசலை தயாரிக்க பயிற்சியளித்தனர். இந்த பயிற்சியில் நெல்லுக்கு, நாட்டு பசுவின் சாணம் 1 கிலோ, ஹோமியம் 10 லிட்டர், உளுந்து மாவு 1 கிலோ, நாட்டு சர்க்கரை 1 கிலோ, வரப்பு மண் 1 கைப்பிடி இத்துடன் 200 லிட்டர் தண்ணீல் கலந்து கடிகார சுற்றில் ஒரு நாளைக்கு 2 தடவை 1 நிமிடம் வீதம் கலக்க வேண்டும். இதனால் ஏக்கருக்கு மகசூல் சுமார் 35 மூட்டைகளுக்கு மேல் கிடைக்கும். ஆனால் இதற்கான செலவு விவசாயிகளுக்கு ஒரு பைசா கூட செலவில்லாமல், இந்த கரைசலில் கலக்கப்படும் பொருட்கள் அனைத்தும் நமக்கு வீட்டில்

அருகில் கிடைக்கும் செலவில்லாத பொருட்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவே ரசாயன உரங்களை பயன்படுத்தி இருந்தால் ஒரு விவசாயி ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் செலவழிக்க வேண்டிய நிலை ஏற்படுவதுடன் அதற்கான மகசூலை விவசாயிகள் எதிர்பார்க்க முடியாது. அத்துடன் சுற்றுப்புற சூழல் சீர்கேடு, விஷமுள்ள உணவுகளை உண்பதால் மக்களுக்கு கொடிய நோய்கள் ஏற்படும். இந்த செலவில்லா இயற்கை உரத்தை தயாரிக்கும் முறையை அரசே ஏற்று விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த மாவட்டம், கிராமங்கள் தோறும் இதுபோன்ற முகாம்களை விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நலன்கருதி அரசே நடத்த வேண்டும். அதனை முன்னிட்டு இந்த இயற்கை முறையில் செலவில்லா இயற்கை விவசாயத்தை விவசாயிகள் அனைவரும் கடைபிடித்து நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்று விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

**நாகை மாவட்டத்தில் பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் காப்பீடு செய்ய நாளை கடைசி**

நாகை, : நாகை மாவட்டத்தில் பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் காப்பீடு செய்ய நாளை கடைசி நாளாகும். தேசிய வேளாண் பயிர் காப்பீடு நிறுவனத்தின் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் நடைமுறை படுத்தப்படும் சம்பா மற்றும் தாளடி நெற்பயிருக்கு 2015-16ம் ஆண்டுக்கான பயிர் காப்பீடு பிரிமிய தொகையாக ஏக்கருக்கு சிறு குறு விவசாயிகள் ரூ.134, இதர விவசாயிகள் ரூ.149 பிரிமிய தொகையாக செலுத்தி காப்பீடு செய்து கொள்ள வேண்டும். பயிர்க்கடன் பெறும் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதற்கான பிரிமிய தொகை செலுத்த நாளை (31ம் தேதி) கடைசி நாளாகும். எனவே விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீடு செய்வது தொடர்பாக உரிய ஆவணங்களை கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்று தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்துள்ள தொடர்புடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்ககளில் தவறாமல் பயிர் காப்பீடு செய்து இயற்கை சீற்றங்களால் பயிருக்கு ஏற்படும் இழப்பிலிருந்து பாதுகாத்து

கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முதலாம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறக்க திட்டம் பி.ஏ.பி. கால்வாயை தூர்வார வேண்டும் முறையீட்டு குழு கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**



பொள்ளாச்சி

முதலாம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறக்க திட்டமிடப்பட்டு உள்ளதால் பி.ஏ.பி. கால்வாயை விரைவில் தூர்வார வேண்டும் என்று முறையீட்டு குழு கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

முறையீட்டு குழு கூட்டம்

பொள்ளாச்சி சப்–கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் முறையீட்டு குழு கூட்டம் நடைபெற்றது. இதற்கு சப்–கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஜெயந்தி தலைமை தாங்கினார். கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பேசியதாவது:–

ராமபட்டிணத்தில் இருந்து தாவளம் வரையிலான வாய்க்கால் தூர்வாரும் பணி பாதியில் நிறுத்தப்பட்டு உள்ளது. இதனை விரைந்து முடிக்க வேண்டும். ஜலத்தூர் பிரிவில் குளிர்பான தொழிற்சாலை அமைக்க தடை விதிக்க வேண்டும். அந்த தொழிற்சாலையால் சுமார் 10 கிராமங்களில் நிலத்தடிநீர் மட்டம் பாதிக்கப்படும். திருமூர்த்தி அணையில் இருந்து 4–ம் மண்டலத்திற்கு விடப்பட்டு வரும் தண்ணீர் ஜனவரி 5–ந்தேதியுடன் முடிவடைகிறது.

மருத்துவ கழிவுகள்

இதை தொடர்ந்து முதலாம் மண்டலத்திற்கு ஜனவரி 20–ந்தேதி முதல் தண்ணீர் திறந்துவிட திட்டமிடப்பட்டு உள்ளது. குறுகிய காலமே இருப்பதால் கால்வாய்களை தூர்வார வேண்டும் என்று கோவை மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை விடுத்தோம். இதன்பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்ட பணியாளர்கள் மூலம் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள மாவட்ட கலெக்டர், வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கு வாய்மொழி உத்தரவிட்டார். ஆனால் இதுவரை கால்வாய் தூர்வாரும் பணி நடைபெறவில்லை. எனவே பி.ஏ.பி. கால்வாயை விரைவில் தூர்வார வேண்டும்.

கள்ளிபாளையம் நீரினை பயன்படுத்துவோர் சங்க எல்லையில் உள்ள பி.ஏ.பி. கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரளாவில் இருந்து மருத்துவ கழிவுகள் பொள்ளாச்சி மற்றும் அதன்சுற்றுப்புறங்களில் கொட்டுவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. ஆழியாறு பழைய ஆயக்கட்டு பாசன பகுதியில் 5 வாய்க்கால்களில் மதகுகள் உடையும் நிலையில் உள்ளன. இதை

பழுதுபார்க்க வேண்டும். ஆனைமலை உப்பாற்றில் இருந்து காரப்பட்டி ரோட்டில் குடிநீர் குழாய் உடைந்து தண்ணீர் வீணாகுகிறது. குழாய் உடைப்பை சரிசெய்ய வேண்டும். மயில், காட்டு பன்றிகளால் விவசாய பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்றி மாநில வனத்துறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

<u>நடவடிக்கை எடுக்கப்படும்</u>

இதையடுத்து, சப்–கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஜெயந்தி கூறுகையில், கால்வாய் தூர்வாருவது தொடர்பாக பொள்ளாச்சி தெற்கு, வடக்கு, கிணத்துக்கடவு, ஆனைமலை ஒன்றியத்தை சேர்ந்த வட்டார வளர்ச்சி அதிகாரிகள் சப்–கலெக்டரை சந்திக்க வேண்டும். விவசாயிகளின் கோரிக்கைகளை, அந்தந்த துறை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் உமாராணி, பட்டுவளர்ச்சி துறை அதிகாரி அழகு ராமலிங்கம், வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் விஸ்வநாதன், மகாலிங்கபுரம் இளம்மின் பொறியாளர் வரதராஜன், விவசாயிகள் பரமசிவம், முத்துசாமி, தாவளம் ஆறுமுகம், பட்டீஸ்வரன் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

**கோத்தகிரி பகுதியில் மேரக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**



கோத்தகிரி, கோத்தகிரி பகுதியில் மேரக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

<u>கடும் பனிப்பொழிவு</u>

கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இங்கு பெரும்பாலான விவசாயிகள் தேயிலை சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கோத்தகிரி பகுதியில் இரவு மற்றும் அதிகாலை நேரத்தில் கடும் பனிப்பொழிவும், பகலில் கடும் வெயிலும் அடிக்கிறது.

இதன் காரணமாக தேயிலை செடிகள் கருக தொடங்கி உள்ளன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதையொட்டி விவசாயிகள் மாற்று வருவாய் பெரும் வகையில் மேரக்காய் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

<u>நன்கு விளைச்சல்</u>

கோத்தகிரி அகே உள்ள மிளிதேன், எரிசிபெட்டா, உல்லதட்டி, சுண்டட்டி பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் தங்களது விவசாய நிலங்களில்

கம்பிகள் மூலம் பந்தல் அமைந்து மேரக்காய் கொடிகளை படரவிட்டு உள்ளனர். ஒரு சில விவசாயிகளின் தோட்டங்களில் மேரக்காய் நன்கு விளைந்துள்ளன. இவற்றை விவசாயிகள் அறுவடை செய்து கோத்தகிரி மார்க்கெட்டுக்கும், மேட்டுப்பாளையத்தில் உள்ள காய்கறி மண்டிகளுக்கும் விற்பனைக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

வருகிற பிப்ரவரி மாதம் வரை பனிக்காலம் என்பதால் உறைபனியின் தாக்கம் அதிகமாக இருக்கும். இதனால் தேயிலை செடிகள் கருகி விடுவதால் எங்களது பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே, மாற்றுப்பயிராக நீலகிரி மலை காய்கறிகளை பயிரிடுகிறோம். இந்த பகுதிகளில் மேரக்காய் நன்றாக விளைகிறது. அதே நேரத்தில் கிலோவுக்கு ரூ.8 முதல் ரூ.10 வரை நல்ல விலை கிடைப்பதாலும் மேரக்காய் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

கருத்துகள்

**மக்காசோளம் பயிருக்கு மூட்டைக்கு ரூ.3 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய கோரிக்கை**



வேப்பந்தட்டை பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுகா பகுதியில் ஏராளமான விவசாயிகள் மானாவாரி நிலத்தில் மக்காசோளம்

பயிரிட்டுள்ளனர். கடந்த மாதம் பெய்த கனமழையினால் பெரும்பாலான விவசாயிகளின் மக்காச்சோளப் பயிர் நீரில் மூழ்கி சேதம் அடைந்தது. மேலும் மழையின்போது பலத்த காற்று வீசியதால் முன்பட்டத்தில் பயிரிட்டிருந்த மக்காச்சோளம் ஓரளவு வளர்ந்த நிலையில் கீழே சாய்ந்து நீரில் மூழ்கியதால் விளைந்த கதிர்கள் வயலிலேயே முளைத்து சேதமடைந்துள்ளது. இதனால் பெருமளவு மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது.

அதாவது கடந்த ஆண்டுகளில் ஒரு ஏக்கர் நிலத்தில் 25 முதல் 30 மூட்டைகள் (1 மூட்டை 100 கிலோ) விளைந்தது. இந்த ஆண்டு தொடர் மழையினால் ஒரு ஏக்கர் நிலத்தில் 5 முதல் 10 மூட்டைகள் மட்டுமே மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. இதனால் இந்த ஆண்டு விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மக்காச்சோளத்திற்கு அரசின் நிர்ணய விலையாக மூட்டை ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் அறிவிக்க வேண்டும் எனவும், கூட்டுறவு கடன் சங்கம் மூலம் பயிர் காப்பீடு (இன்சூரன்சு) செய்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**உலக அளவில் 70 சதவீத மாம்பழங்கள் இந்தியாவில் உற்பத்தி வேளாண்மை ஆராய்ச்சிக்கழக முதன்மை துணை இயக்குனர் தகவல்**




பெரியகுளம் உலக அளவில் 70 சதவீத மாம்பழங்கள் இந்தியாவில்

உற்பத்தி செய்யப்படுகிறது என்று வேளாண்மை ஆராய்ச்சிக்கழக முதன்மை துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

<u>கருத்தரங்கு</u>

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள அரசு தோட்டக்கலை கல்லூரியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் இயற்கைவள மேலாண்மை இயக்குனரகம் இணைந்து நானோ அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை சார்பில் நானோ தொழில் நுட்பத்தின் மூலம் பழங்களை பாதுகாத்தல் என்ற திட்டத்தில் மா சாகுபடி குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் பாலமோகன் தலைமை தாங்கினார்.

பழவியல் துறை தலைவர் ராஜாங்கம் முன்னிலை வகித்தார். பேராசிரியர் கே.எஸ்.சுப்பிரமணியன் திட்டம் குறித்து விளக்கி பேசினார். தமிழ்நாடு பழ உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர் அருண், தமிழ்நாடு வாழை விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் கருப்பையா, கிருஷ்ணகிரி மாவட்ட மா விவசாயி சாந்தகுமார், பெரியகுளம் மா விவசாயிகள் சங்க தலைவர் எம்.ஜி.சந்தானம் ஆகியோர் பேசினார்கள்.

<u>முதன்மை துணை இயக்குனர்</u>

புதுடெல்லி இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக தோட்டக்கலை முதன்மை துணை இயக்குனர் என்.கே.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டு கருத்தரங்கினை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

பழங்களின் அரசன் என்று அழைக்கப்படும் மாம்பழம், உலகளவில் 70 சதவிகிதம் இந்தியாவில் தான் உற்பத்தியாகிறது. எனினும் இந்தியாவில் நிலவும் வெப்பநிலை, குறைந்த எண்ணிக்கையில் குளிர்சாதன கட்டமைப்பு, அறுவடைக்கு பிந்தைய தொழில் நுட்பங்களை கடைபிடிக்காதது ஆகிய காரணங்களால் 30 முதல் 35 சதவீத பழங்கள் வீணாகி பெருமளவில் சேதம் ஏற்படுகின்றது. இவ்வாறு ஏற்படும்

இழப்பினால் மக்களுக்கு கிடைக்கக்கூடிய பழங்களின் அளவு வெகுவாக குறைகிறது.

ரூ.30½ கோடி

இந்த பேரிழப்பை தடுக்க கனடா நாட்டின் ஆராய்ச்சி நிறுவனம் முன்வந்து நிதியுதவி செய்துள்ளது. கனடா பன்னாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கனடா அரசு இணைந்து நானோ தொழில் நுட்பம் மூலம் மாம்பழங்களை கெடாமல் பாதுகாத்தல் என்ற ஆராய்ச்சி திட்டத்தினை சர்வதேச உணவு பாதுகாப்பு ஆராய்ச்சி நிதியின் கீழ் மொத்தமாக ரூ.30 கோடியே 50 லட்சம் வழங்கியுள்ளது.

இந்த திட்டத்தில் 7 முதன்மை ஆராய்ச்சி நிலையங்களான தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் கல்ப் பல்கலைக்கழகம், கனடா தொழில்நுட்ப நிலையம், இலங்கை கொகைன் வேளாண் பல்கலைக்கழகம், டான்சானியா, நைரோபி, கென்யா, மேற்கு இந்திய தீவுகள் ஆகியவற்றின் பல்கலைக்கழங்கள் இணைந்து இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதில் வேளாண் பல்கலைக்கழகத்திற்கு ரூ.11 கோடியே 40 லட்சம் கிடைத்துள்ளது. இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோள் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பீட்டை குறைத்து, மாம்பழங்களின் தரத்தினை உயர்த்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகும்.

மேற்கண்டவாறு அவர் பேசினார். விவசாய கருத்தரங்கில் மாநில அளவில் 500–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். கருத்தரங்கு முடிவில் பேராசிரியை ஜானவி நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு, தானிய சேமிப்பு பயிற்சி**



ஆலங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விவசாயிகளுக்கு, தானிய சேமிப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி மதுரை வேளாண்மை விளம்பரம் மற்றும் பிரசார பிரிவு சார்பில் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் செ.அமலா, விவசாயிகளுக்கு நெல், வாழை, காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை அறுவடை பின்செய் நேர்த்தி, தரம் பிரித்தல், சேமிப்பு, சந்தைபடுத்துதல், சேதங்களை தவிர்த்தல், ஒழுங்குமுறை விற்பனை கூட பயன்கள், பொருளீட்டு கடன் திட்டம், விளைபொருட்களை மதிப்பு கூட்டுதல், அக்மார்க் தரச்சான்று மற்றும் விவசாயிகளுக்கு உற்பத்தியாளர் நிறுவனம் பற்றி விளக்கம் அளித்தார்.

பயிற்சியில் ஆலங்குளம், மேலமருதப்பபுரம், வெண்ணிலிங்கபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் ஆலங்குளம் வேளாண்மை உதவி அலுவலர் முகுந்தாதேவி, நெல்லை வேளாண்மை அலுவலர் முருகேசன், ஆலங்குளம் வேளாண்மை அலுவலர் ராமர், ஒழுங்குமுறை விற்பனை கூட மேற்பார்வையாளர்

முத்துராஜா, ஆலங்குளம் உதவி வேளாண்மை அலுவலர் முருகையா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

இன்றைய வேளாண் செய்திகள்

**இவரைத் தெரியுமா?- கார்ல் கான்டெர்**



நீர் வள மேலாண்மை சர்வதேச நிறுவனமான சர்க்கிள் ஆப் புளூ நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர்.

அமெரிக்காவின் நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தில் புலனாய்வு மற்றும் பத்திரிகை துறை சார்ந்த பட்டமும், அமெரிக்க பல்கலைக்கழகத்தில் அமெரிக்கன் ஸ்டடீஸ் சார்ந்த பட்டமும் பெற்றவர்.

உலகப் பொருளாதார அமைப்பில் உறுப்பினர். அதன் சர்வதேச நீர் பாதுகாப்பு கவுன்சிலில் துணைத் தலைவராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

வுட்ரவ் வில்சன் இண்டர்நேஷனல் நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

ராக்ஃபெல்லர் பவுண்டேஷனின் நூற்றாண்டு புத்தாக்க விருது பெற்றவர்.

உணவு, நீர், மற்றும் மின்சார வளங்கள் சார்ந்த ஆராய்ச்சி, பகுப்பாய்வு மற்றும் அறிக்கை அளிப்பது, திட்ட உருவாக்கம், மேலாண்மை, தொடர்பு

உத்தி, ரேடியோ மற்றும் ஆடியோ ஒலிபரப்பு, பத்திரிகையியல், சுற்றுச் சூழல், நீராதார வள மேலாண்மை உள்ளிட்ட துறைகளில் வல்லுனர்.

**ஆன்லைனில் பசு வரட்டிக்கு கிராக்கி**



கிறிஸ்துமஸ் முதல் புத்தாண்டு வரை விடுமுறைக் காலமாதலால் ஆன்லைன் வர்த்தகம் அமோகமாக உள்ளது. இதில் நூதனமான ஒரு பொருளுக்கு கடும் கிராக்கி நிலவுகிறது என்றால் நம்ப முடிகிறதா? கிராமப்பகுதிகளில் அடுப்பெரிக்க பயன்படுத்தும் பசு வரட்டிக்கு ஆன்லைனில் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கிராமப்பகுதிகளில் பசு சாணத்துடன் வைக்கோலை கலந்து தட்டி காயவைப்பார்கள். நன்கு உலர்ந்த வரட்டியை அடுப்பெரிக்க பயன்படுத்துவார்கள். இத்தகைய வரட்டி தேவை என ஆன்லைனில் பலர் கேட்கின்றனர். நகர்மயமாதல் அதிகரித்துள்ளதால் வரட்டி கிடைப்பது அரிதாகியுள்ளது. இதனால் ஆன்லைன் மூலமாக தேடத் தொடங்கியுள்ளனர்.

வாடிக்கையாளர்களின் தேவை உணர்ந்து அமேசான், இ-பே உள்ளிட்ட ஆன்லைன் வர்த்தக நிறுவனங்கள் மொத்தமாக வரட்டியை வாங்க கிராமப் பகுதிகளை நோக்கி படையெடுத் துள்ளன.

அதிக அளவில் ஆர்டர் அளித் தால் தள்ளுபடி தருவதாகவும் அறிவித்துள்ளன. சில வாடிக் கையாளர்கள் வரட்டியை அழகுற பேக் செய்து தருமாறு கோருகின்றனர்.

வரட்டியை அடுப்பெரிக்கும் பழக்கம் பல ஆண்டுகளாக உள்ளது. ஆனால் ஹோலி போன்ற பண்டிகையின்போது பசுஞ்சாணியில் மெழுகி கலர் கோலம் போடும் பழக்கமும் உள்ளது. பசுஞ்சாணி சிறந்த கிருமி நாசினி என்பதாலும் இதைப் பயன்படுத்துவது அதிகமாக உள்ளது.

## தொழில் கலாச்சாரம்: செவ்வந்திப் பூக்களை விரும்பாத தேசத்திலும் வாய்ப்புகள் ஏராளம்



மக்கள் தொகை ஒரு கோடி பதிமூன்று லட்சம். நாட்டில் சாக்லேட் உற்பத்தி 2,20,000 டன்கள். அதாவது, சராசரியாக ஓர் ஆளுக்கு ஆண்டுக்கு 20 கிலோ.

1,000 வகையான பீர்கள் தயாராகின்றன. சராசரிக் குடிமகன் ஒவ்வொரு ஆண்டும் குடிப்பது 150 லிட்டர். உருளைக் கிழங்கு சிப்ஸ் கண்டுபிடித்தது இந்த தேசம்தான்.

திரும்பிய பக்கமெல்லாம் அடுமனைகள். இவர்களின் சுவையான கேக், பிஸ்கெட்கள் வாங்க வரிசையில் நிற்கும் உள்ளூர் மக்கள், சுற்றுலாப் பயணிகள்.

இவை அத்தனையையும் பார்த்து, பெல்ஜியம் ஒரு சாப்பாட்டு ராமன்கள் நாடு என்று நினைத்துவிடாதீர்கள். இன்னும் மாபெரும் சிறப்புகள் பெல்ஜியத்துக்கு உண்டு.

உலகம் முழுக்க 20 கோடிப் பிரதிகளுக்கும் அதிகமாக விற்பனை யாகியிருக்கும், குழந்தைகள் விரும்பிப் படிக்கும் டின் டின் காமிக்ஸ், ஹெர்கே என்னும் பெல்ஜியக் கார்ட்டூனிஸ்டின் படைப்பு.

ஐ.நா. சபையின் அமைப்பான யூனிசெஃப், குழந்தைகள் கல்வியில் பெல்ஜியத்துக்கு முதலிடம் தந்திருக்கிறது. பதினெட்டு வயது வரை, எல்லா ஆண்களுக்கும், பெண் களுக்கும் கல்வி கட்டாயம். 18 வயதான அனைத்து பெல்ஜிய குடிமக்களும் கட்டாயமாக ஓட்டுப் போடவேண்டும்.

**பூகோள அமைப்பு_**

தென் ஐரோப்பாவில் இருக்கும் தேசம். அண்டைய நாடுகள் பிரான்ஸ், ஜெர்மனி, லக்ஸம்பெர்க், நெதர்லாந்து. நிலப்பரப்பு 30,528 சதுர கிலோமீட்டர்கள். கடற்கரை, சமவெளிகள், காடுகள் என மூன்று வகை நிலப்பகுதிகள் இருக்கின்றன. தலைநகரம், பிரெஸெல்ஸ்.

**சுருக்க வரலாறு**

ஆரம்ப நாட்களில், கால் (Gaul) என்னும் தேசத்தின் பகுதியாக இருந்தது. பெல்கே என்னும் பழங்குடி மக்கள் வசித்தார்கள். நாட்டுக்குப் பெல்ஜியம்

என்னும் பெயர் வரக் காரணம் இவர்கள்தாம். கி.மு. 53 - இல், ரோமாபுரியின் ஜீலியஸ் சீஸர் படையெடுத்து வந்தார். வெற்றி கண்டு, ரோம சாம்ராஜ்ஜியத்தின் கீழ்க் கொண்டுவந்தார். இதற்குப் பின், ஆஸ்திரியா, ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய பல நாடுகளின் ஆட்சி வந்தது. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின், 1815 - இல், நெதர்லாந்து நாட்டின் பகுதியானது. 1830 - இல், விடுதலைப் போராட்டம் தொடங்கியது. பெல்ஜியம் நெதர்லாந்திலிருந்து சுதந்திரம் பெற்றுத் தனி நாடானது.

முதலாம் லெப்போல்ட் என்னும் மண்ணின் மைந்தரான அரசர் அரியணை ஏறினார். 1831 - இல், புதிய அரசியல் சட்டம் அமலுக்கு வந்தது. இதன்படி, நாட்டுத் தலைவர் மன்னர்: ஆட்சி நடத்துபவர்கள், மக்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள்.

1940 - இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனியால் வெல்லப்பட்டது. அரசர் இங்கிலாந்துக்குத் தப்பியோடினார். 1944- இல், நேச நாடுகள் பெல்ஜியத்தின் சுதந்திரத்தை மீட்டுத் தந்தன.

**மக்கள் தொகை**

ஒரு கோடி 13 லட்சம். அனைவரும் கிறிஸ்தவர்கள். 75 சதவீதம் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள்: 25 சதவீதம் பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள். டச்சு மொழி பேசுபவர்கள் 60 சதவீதம்: பிரெஞ்சு 40 சதவீதம். கொஞ்சம் பேர் ஜெர்மன் பேசுகிறார்கள். மூன்று மொழிகளும் ஆட்சி மொழிகள்.

கட்டாயக் கல்வி இருப்பதால், கல்வியறிவு 99 சதவீதம். ஆண்கள், பெண்கள் இருபாலரும் கல்வியறிவு மிக்கவர்கள்.

**ஆட்சிமுறை**

அரசர் தலைமை வகிக்கும் மக்களாட்சி. அரசர் வம்சாவளியில் வருகிறார். செனட் என்னும் மேல்சபை. பிரதிநிதிகள் சபை (Chamber of Representatives) என்னும் கீழ்சபை. நிர்வாகத் தலைவர் முதலமைச்சர்.

டச்சு, பிரெஞ்சு, ஜெர்மனியர் ஆகிய மூன்று இனத்தவருக்கும் ஆட்சியில் பங்கு கிடைக்கும்படி, அரசியலமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால், எந்தத் தனிக்கட்சியும், அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கமுடியாத நிலை. 2010, 2011 - இல், கட்சிகளுக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள ஒற்றுமை வராததால், 541 நாட்கள், அரசரே ஆட்சியை நடத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இன்றைய ஆட்சி, ஆறு கட்சிகளின் கூட்டாட்சி!

**பொருளாதாரம்**

ஐரோப்பாவின் மத்திய பகுதியில் இருக்கிறது. இதனால், ஐரோப்பிய யூனியனின் தலைமையகம். ஆன்ட்வெர்ப் என்னும் முக்கிய துறைமுகம், வர்த்தக மையம். பெல்ஜியத்தின் சாலைகள் போன்ற கட்டமைப்புகளும் மிகச் சிறப்பாக இருக்கின்றன. பொருளாதாரத்தில் சேவைத் துறையின் பங்கு 77 சதவீதமாக விளங்க, இவை உதவுகின்றன. தொழில் துறையின் பங்கு 22 சதவீதம். கோபால்ட், ரேடியம், துத்தநாகம், ஈயம் ஆகியவற்றின் தயாரிப்பில், பெல்ஜியத்துக்குத் தனி இடம் உண்டு. பெட்ரோலியச் சுத்திகரிப்பும் முக்கியமான தொழில். விவசாயம் பொருளாதாரத்தில் ஒரு சதவீதப் பங்கு மட்டுமே வகிக்கிறது.

**நாணயம்_**

பெல்ஜியம் ஐரோப்பிய யூனியன் அங்கத்தினர். ஆகவே, அவர்களின் பொது நாணயமான யூரோதான் கரென்சி. சுமார் 72 ரூபாய்க்கு சமம்.

**இந்தியாவோடு வியாபாரம்**

இந்தியாவின் அயல்நாட்டு வர்த்தகத்தில், பெல்ஜியத்துக்கு முக்கிய இடம் இருக்கிறது. மொத்த ஏற்றுமதி, இறக்குமதிப் பரிவர்த்தனை சுமார் ஒரு லட்சம் கோடிகளை எட்டுகிறது. நம் ஏற்றுமதி 33,717 கோடிகள். இவற்றுள் முக்கியமானவை உலோகங்கள், கெமிக்கல்கள், இரும்பு உருக்குப் பொருட்கள், இயந்திரங்கள், ஆயத்த ஆடைகள், மீன்கள், புகையிலை ஆகியவை. நம் இறக்குமதி 65,939 கோடிகள். இயந்திரங்கள்,

பிளாஸ்டிக்ஸ், கெமிக்கல்கள், மருந்துகள், அலுமினியம் போன்றவை இந்தப் பட்டியலில் இடம் பிடிக்கின்றன.

**விசிட்**

ஜூன் முதல் ஆகஸ்ட் வரை கோடைக்காலம். ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். நவம்பர் முதல் பிப்ரவரி வரை நடுக்கும் குளிர். ஆகவே, மார்ச், ஏப்ரல், மே, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் போவது நல்லது.

**பிசினஸ் டிப்ஸ்_**

நேரம் தவறாமை மிக முக்கியம். பெரும்பாலானோர் வருடத்துக்கு ஒரு மாதம் விடுமுறை எடுப்பர்கள். ஆகவே, முன்னதாகவே சந்திப்பை உறுதி செய்துகொள்ளுங்கள். முதல் சந்திப்பு பெரும்பாலும், ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் சந்திப்பாகத்தான் இருக்கும். பிசினஸ் டீல் உறுதியாக, இரண்டு அல்லது மூன்று சந்திப்புகள் தேவைப்படும்.

கை குலுக்கல் சாதாரண வரவேற்பு முறை. சந்திக்கும்போதும், விடை பெறும்போதும், கை குலுக்குவார்கள். பண்பாடு மிக்கவர்கள். கதவைத் தட்டிவிட்டுத்தான், அவர்கள் அறைகளுக்குள் நுழைய வேண்டும். விசிட்டிங் கார்டுகள் அவசியம். இவை ஒரு பக்கம் ஆங்கிலத்திலும், மறுபக்கம் (போகும் இடத்துக்கு ஏற்ப) டச்சு / பிரெஞ்சு மொழியிலும் இருப்பது நல்லது. தனிப்பட்ட விஷயங்கள், குடும்பம், மதம் ஆகியவை பற்றிச் சாதாரணமாக அவர்கள் பேசுவதில்லை.

பாக்கெட்டில் கைகளை வைத்துக் கொள்வது, சுட்டிக் காட்டிப் பேசுவது, கை சொடுக்கிக் கூப்பிடுவது, முதுகில் தட்டுவது, உரக்கப் பேசுவது ஆகியவை அநாகரிகமாகக் கருதப்படுகின்றன.

**உடைகள்_**

சூட் அணிவது நல்லது. ஷூக்கள் பாலிஷ் செய்யப்பட்டுப் “பளிச்” என்று இருக்கவேண்டும்.

**பரிசுகள் தருதல்_**

பரிசுகள் தேவையில்லை. தந்தால், விலை உயர்ந்தவையாக இருக்கக்கூடாது. பரிசோடு விசிட்டிங் கார்ட் வைக்கவே கூடாது. அவர்கள் வீடுகளுக்கு அழைத்தால், பூங்கொத்து வாங்கிக்கொண்டு போவது நல்லது. 2 எச்சரிகைகள் - பூங்கொத்துக்களில், செவ்வந்திப் பூக்கள் இருக்கக்கூடாது. இவை மரணத்தைக் குறிப்பவை. மொத்தப் பூக்களின் எண்ணிக்கை பதின்மூன்றாக இருக்கக்கூடாது.